**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 168** **நாள் : 25.10.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணி, துப்புரவு பணி மற்றும் நோய் தடுப்பு தொடர்பான ஆய்வுக்கூட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகை அரங்கில் இன்று (25.10.2018) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் (பொ) திருமதி ஆர்.லலிதா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி, தீவிர துப்புரவு பணி மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பான ஆய்வு மற்றும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகரின் பிரதான பேருந்து சாலைகள், உட்புற சாலைகள் உட்பட அனைத்து சாலைகளிலும் உள்ள குப்பை தொட்டியில் உள்ள குப்பைகளை காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் குப்பை தொட்டிகளில் குப்பைகள் நிரம்பி வழியாமல் இருக்கும் வகையில் உடனுக்குடன் முழுமையாக அகற்றிடவும், குறிப்பாக குடிசைப் பகுதிகள், மார்க்கெட் பகுதிகள், வணிக வளாகங்கள் அமைந்துள்ள பகுதிகள், மருத்துவமனை வளாகங்கள் மற்றும் பள்ளி வளாக பகுதிகள் ஆகிய இடங்களில் தீவிர துப்புரவு பணி மேற்கொண்டு குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் சாலையோராங்களில் அமைந்துள்ள இளநீர் கடைகள் மற்றும் வாகன டயர்கள் பழுதுபார்க்கும் பகுதிகள் ஆகிய இடங்களில் குப்பைகள் சேராமல் தீவிர துப்புரவு பணி மேற்கொள்ள வேண்டிடவும், அனைத்து சாலைகளிலும் மழைநீர் தேங்காவண்ணம் மரக்கட்டை பிரஸ் கொண்டு உடனுக்குடன் அப்புறவுப்படித்திடவும் மற்றும் காம்பேக்டர் குப்பை தொட்டிகளில் உள்ள குப்பைகள் முழுவதும் அகற்றி அன்றாடம் பிளீச்சிங் பவுடர் தெளிப்பதையும், மண்டல அலுவலர்கள், சுகாதார அலுவலர்கள் தொடர் கண்காணிப்பு பணி செய்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பணியாளர்கள் வீடு வீடாக சென்று கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் போது வீட்டில் குடியிருப்பவர்களிடம் கொசுபுழு வளரும் இடங்களை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு கையேடு, துண்டு பிரசுரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வடகிழக்கு பருவ மழை தொடங்குவதை முன்னிட்டு வீடுகளில் நீர் தேங்கும் தேவையற்ற பொருட்களை உடனுக்குடன் அப்புறபடித்திடவும் குடியிருப்பவர்களிடம் அறிவுறுத்தவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநகராட்சி பணியாளர்கள் மூலம்

திறந்தவெளி இடங்கள், காலிமனைகள் மற்றும் இதர இடங்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அப்புறபடித்திடவும் அறிவுறுத்தப்பட்டது.

டெங்கு கொசு உற்பத்தியாகும் வகையிலும், தேவையற்ற இடங்களில் குப்பைகளை கொட்டும் குடியிருப்பு வாசிகள் மீது சுகாதார துறை சட்ட விதிகளின்படி கடும் நடவடிக்கைகள் மற்றும் அபராதங்கள் மேற்கொள்ளப்படும். மேலும் தீவிர டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் தீவிர துப்புரவு பணிகளுக்கும் பொது மக்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திரு.குமரவேல் பாண்டியன் இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் (வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு), திருமதி.திவ்யதர்ஷினி இ.ஆ.ப., டாக்டர்.சுபோத் குமார் இ.ஆ.ப., திரு,எஸ், கோபாலசுந்தரராஜ் இ.ஆ.ப., அவர்களும், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி அவர்கள் தலைமை பொறியாளர் (கட்டடம்), திரு.என்.மகேசன் தலைமை பொறியாளர் (பாலங்கள்) திரு.ஆர்.சீனிவாசன் மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) திரு.எஸ்.சக்திமணிகண்டன் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) திரு.எஸ்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மண்டல அலுவலர்கள், கூடுதல் மாநகர நல அலுவலர்கள், மண்டல செயற் பொறியாளர்கள், ஒருங்கிணைப்பு அலுவலர்கள், உதவி செயற் பொறியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் துப்புரவு ஆய்வாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**